**13.01.2026**

# ஜெ. ஜெ கலை அறிவியல் கல்லூரியில் போதை பொருட்கள் தடுப்புக் குழு சார்பாக போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஜெ. ஜெ கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி), போதை பொருட்கள் தடுப்புக் குழு சார்பாக போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி 13.01.2026 அன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் திருமதி. P. உமாசங்கரி, காவல் ஆய்வாளர், நமணசமுத்திரம் காவல் நிலையம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கல்லூரி மாணவர்களுக்கு போதை பொருட்கள் பற்றியும், போதைப் பொருட்கள் சட்டத்துக்கு விரோதமாக விற்கப்பட்டு இளைஞர்களிடையே பயன்படுத்துவதை பற்றியும், போதை பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். போதை பொருட்கள் தீய நண்பர்களின் சகவாசத்தினால் இளைஞர்களிடையே பரவி வருகிறது பற்றியும், போதைப் பொருட்கள் பயன்படுத்தும் நண்பர்களிடம் கவனமாக இருக்க வேண்டும் என்பதை பற்றியும் எடுத்துரைத்தார்.

திரு ரவிச்சந்திரன் மற்றும் திரு ஆறுமுகம், காவல் உதவி ஆய்வாளர்கள், நமணசமுத்திரம் காவல் நிலையம் ஆகியோரும் பங்கு பெற்று ஆரோக்கியமான உணவு முறைகள் பற்றி சிறப்புரையாற்றி நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்வின் தொடக்கமாக உயிர் தொழில்நுட்பவியல் துறை தலைவர் முனைவர் G மணிகண்டன் வரவேற்புரை ஆற்ற, கல்லூரி முதல்வர் முனைவர் J பரசுராமன் அவர்கள் தலைமை உரையாற்றினார். அவர்தம் உரையில் மாணவர்கள் போதை பொருளை பற்றின விழிப்புணர்வு பெற்றிருக்க வேண்டும் போதை பொருட்களினால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை பற்றியும் மாணவர்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடக்க

வேண்டிய அவசியத்தை பற்றியும் திருக்குறளை மேற்கோள் காட்டி சிறப்பாக எடுத்துரைத்தார்.

தமிழ் துறை தலைவர் முனைவர் தயாநிதி அவர்கள் நன்றியுரை ஆற்ற நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

முதல்வர்